நாள் -17.06.2025

**C.C. No.**114/2021

**அ.சா.1-நடராஜ், த/பெ. பழனிசாமி**

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act**, 1969 (**Central Act** 44 **of** 1969) **on the** 17th **day of June** 2025.

சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் இன்று குறுக்கு விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

1. நான் பணிபுரியும் பல்லடம் CHITS பதிவு செய்யப்பட்ட நிறுவனம் என்றால் சரிதான். எங்கள் நிறுவனத்தின் வரவு செலவுகள் அனைத்தும் கணினியில் பராமரிப்போம் என்றால் சரிதான். LEDGER மூலமாகவும் பராமரிப்போம். இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கணக்கு விபர பட்டியல்களை நான் தயாரிக்கவில்லை. அதற்கு எங்கள் STAFF உள்ளார். அவர் தயாரித்தார். இந்த கணக்கு பட்டியலை தயாரித்தவர் கணக்கு பட்டியலில் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். பொதுவாக எங்கள் நிறுவனத்தில் சீட் எடுப்பவர்கள் பணம் நாங்கள் தரும்பொழுது வவுச்சரில் கையொப்பம் பெற்று பின்னர் தான் பணம் தருவோம் என்றால் சரிதான்.

2. எதிரி இந்த சீட்டு சம்பந்தமான வவுச்சரை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் எதிரிக்கு பணம் கொடுத்ததற்கான எந்த வவுச்சரும் என்னிடம் இல்லை என்பதால் தான் அதை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றும் தாக்கல் செய்துள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி எங்கள் நிறுவனத்தில் சுமார் 4 அல்லது 5 குரூப்பில் சீட்டு போட்டு இருந்தார். பொதுவாக எங்கள் நிறுவனத்தில் சீட்டு எடுத்து பணம் அளிக்கும் பொழுது செக்யூரிட்டிக்காக காசோலை மற்றும் ப்ரோ நோட் வாங்குவது வழக்கம் என்றால் வழக்கு காசோலை வாங்க மாட்டோம். புரோனோட் மட்டும் வாங்குவோம்.

3. நான் காசோலை வாங்குவது இல்லை என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும், பணம் அளிக்கும் பொழுது கையொப்பம் மட்டும் செய்த காசோலையை பெற்றுக்கொண்டு தான் தொகையை அளிப்பது வழக்கம் என்றால் சரியல்ல. EX.P.8 கணக்கு விபரப்பட்டியலின்படி NET BALANCE 1,06,500 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ரூபாய் பத்து லட்சம் சீட்டில் அவர் 5 லட்சத்திற்கு மட்டும் போட்டிருந்தார். கணக்கு பட்டியலில் வட்டி குறித்து எந்த விபரங்களும் இல்லை என்றால் சரிதான். (LEDGER).நான் எனது வழக்கறிஞர் மூலமாக அனுப்பிய வழக்கு அறிவிப்பில் புகார் தரவேண்டிய தொகை மற்றும் அதற்கு உண்டான வட்டி ஆகிய விபரங்கள் குறிப்பிட்டு வழக்குஅறிவிப்பில் இல்லை என்றால் சரிதான். EX.P9 படி எ

ஆறு மாதங்கள் சீட்டு தொகை செலுத்தியதாக கண்டுள்ளது என்றால் சரிதான்.

4. எதிரி ஆறு மாதங்கள் சீட்டு செலுத்தி எந்த தொகையும் எங்கள் நிறுவனத்தில் இருந்து பெறவில்லை என்றால் சரியல்ல. VOUCHER NO 7 தற்பொழுது என்னிடம் உள்ளது என்றால் சரியல்ல, நீதிமன்றத்தில் ஏற்கனவே தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் எதிரி VOUCHER NO 7 கையொப்பம் செய்து எந்த தொகையும் பெறவில்லை என்றும், ஆகவேதான் அதனை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். EX.P8 உண்டான மீத தொகையை எதிரி எங்களிடம் ரொக்கமாக அளித்து விட்டார் என்றும் அதனை மறைத்து நான் பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. EX.P8 படி 06.05.2017 ம் தேதி ரூபாய் 50,000 அளித்துள்ளார் என்றால் சரிதான். அதன் பின்னிட்டு இந்த சீட்டு சம்பந்தமாக எதிரிக்கும் எங்கள் நிறுவனத்திற்கும் எந்த வரவு செலவு கிடையாது என்றால் சரிதான். எதிரி எங்கள் நிறுவனத்திற்கு ரூபாய் 4 லட்சம் தர வேண்டும் என எதன் அடிப்படையில் நாங்கள் கணக்கிட்டோம் என்றால் நாங்கள் கணக்குப் பார்த்த பொழுது நான்கு லட்சத்திற்கும் மேல் தர வேண்டிய இருந்தது. ஆனால் எதிரி எங்களை அணுகி ரூபாய் 4 லட்சம் தருவதாக சொல்லி ஒப்புக்கொண்டு காசோலை அழைத்தார். (மேற்படித்தொகை எதன் அடிப்படையில் கணக்கிட்டோம் என எங்களால் சொல்ல இயலாது என்றால் சரிதான் ).

6. நான் தவறாக ரூபாய் 4 லட்சம் என பூர்த்தி செய்து காசோலையை தாக்கல் செய்தது தான் அதற்கான கணக்கை என்னால் சரிவர நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலவில்லை என்றால் சரியல்ல. சட்டப்படி காசோலையில் குறிப்பிட்டுள்ள தொகையை அளிக்க எதிரி கடமைப்பட்டவர் அல்ல என்றும் மேற்படி தொகை காலாவதி ஆகிவிட்ட தொகை என்றால் சரியல்ல. எதிரி எங்கள் நிறுவனத்தில் கொடுத்ததாக சொல்லப்படும் ப்ரோ நோட் தற்பொழுது எங்கள் வசம் உள்ளது என்றால் சரியல்ல. காசோலை கொடுத்து PRONOTE பெற்றுச்சென்று விட்டார். எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் காசோலை ஊதிய பணம் இல்லை என விருப்பப்பட்டதாக கடந்த 19.01.2021 ம் தேதி எங்கள் வழக்கறிஞர் மூலமாக எதிரிக்கு வழக்கு அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான்.

7. 06.08.2021 ம் தேதி வழக்கறிஞர் பாலகுமார், சேலம் என்பவர் மூலமாக எங்கள் நிறுவனம் மூலமாக இவ்வழக்கு எதிரி தர்மராஜ் அவர்களுக்கு வழக்கறிவு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வழக்கறிப்பு எங்கள் நிறுவனத்தால் எதிரிக்கு அனுப்பப்பட்டவை தான் என்றால் சரிதான். 06.08.2021 ம் தேதியிட்ட வழக்கறிவிப்பு **எ.ம.சா.ஆ.8** ஆக குறியிடு செய்யப்படுகிறது. மேற்படி வழக்கு அறிவிப்பு பத்தி 5 ல் இவ்வழக்கு காசோலை வங்கியில் செலுத்தப்பட்டு திருப்பபட்டதாக சொல்லி உள்ளோம் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பில் தொகைகளை செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளுமாறும் நீவிர் எழுதிக் கொடுத்த சீட்டு ப்ரோன் நோட்டை வாபஸ் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது என சரத்துக்கள் உள்ளது என்றால் சரிதான்.

8. மேலும் அதே பத்தியில் எதிரி பணம் கொடுக்க தவறினால் நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுப்போம் என குறிப்பிட்டு சரத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். EX.P6 AND EX.D1 ஆக இரண்டு வழக்கறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. EX.P9 கணக்கு விபரப்பட்டியில் சொல்லியுள்ள தொகை எதிரி திரும்ப செலுத்த கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. BARRED BY LIMITATION சட்டப்படி இவ்வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.06.17 18:38:53 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**